பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2022 கார்த்திகை 23 திங்கட்கிழமை [09-12-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 13

# பலாலி ராணுவ முகாமை சூழ முமுனைகளிலும் மோதல்!

## வளலாயில் 2ஆம் நாளாக சண்டை

யாழ்ப்பாணம், டிசம்பர் 9

நேற்று பலாலி முகாமிலிருந்து குப்பிளான், கீரிமலை, வளலாய் ஆகிய மூன்று முனைகளில் முன்னேற படையினர் பெரும் பிரயத்தனம் செய்தனர். மூன்று முனைகளிலும் படையினரை விடுதலைப் புலிகள் வழிமறித்தபோது, கடும் சண்டை மூண்டது.

இந்த மோதல்களின்போது இராணுவத் தரப்பில் பெரும் இழப்புக்கள் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. புலிகளின் கடும் தாக்குதல்களினால் படையினரின் முன்னேறும் முயற்சி தடைப்பட்டது.

பலாலியைச் சூழவுள்ள பகுதிகளில் நேற்று அதிகாலை முதல் தொடர்ச்சியான துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டன. பல ஷெல் தாக்குதல்களும் தொடர்ந்தன. இதனால் இப் பகுதிகள் எங்கும் அதிர்ந்தன.

விமானப்படையினரின் குண்டு வீச்சு விமானங்களும் ஹெலிகளும் முகாமைச் சூழவுள்ள பகுதிகளில் கண்மூடித்தனமான தாக்குதல்களை நடத்தின.

(3 ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்காட்டில் நேற்றும் நகர முயற்சி!

யாழ்ப்பாணம், டிச. 9

பலாலிக்கு கிழக்குப் பக்கமாக வளலாய், இடைக்காடு பகுதிகள் ஊடாக, நேற்றும் இராணுவத்தினர் தொடர்ந்தும் முன்னேறும் முயற்சியில் இறங்கினர்.

இரண்டாவது நாளாகவும் நேற்று இப்பகுதியில் விடுதலைப் புலிகள் போராளிகள் தாக்குதல்களை நடத்தினர்.

இராணுவத்தினரும் தமது இடத்தை விஸ்தரிக்கும் நோக்குடன் மேலும் முன்னேறுவதற்காக விடாது தாக்குதல்களில் ஈடுபட்டனர். எனினும் அவர்களின் முயற்சி கைகூடவில்லை.

அங்கு இடம்பெற்ற மோதல்களில் படையினருக்கு பெரும் இழப்புக்கள் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

முன்னேறும் முயற்சி தோல்வியடைந்த நிலையில், அந்தந்தப் பகுதிகளிலேயே நேற்று மாலை வரை அவர்கள் நிலைகொண்டிருந்தனர் என்று கூறப்பட்டது.

## புத்தூர், ஆவரங்காலில் அகதிகள் தஞ்சம்

### 1,200 குடும்பங்கள் இடம்பெயர்வு

யாழ்ப்பாணம், டிச. 9

தற்போதைய இராணுவ நடவடிக்கைகளால் அச்சுவேலி, பத்தமேனி, வளலாய், வரணி, சிறுப்பிட்டி, தம்பாலை, தென்மூலை போன்ற பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சமைத்த உணவு வகைகளை வழங்கி வருகிறது.

சுமார் 1,200 குடும்பங்கள் மேற்கண்ட பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்து புத்தூர், ஆவரங்கால் பகுதிகளுக்கு வந்துள்ளனர்.

யாழ். செயலகத்துக்கு நேற்றுக் காலை கிடைத்த தகவலின் படி ஆவரங்கால் பகுதியில் உள்ள நடராஜா இராமலிங்கம் வித்தியாலயத்தில் முந்நூறு குடும்பங்களும், மகாஜனா வித்தியாலயத்தில் இருநூற்றி ஐம்பது குடும்பங்களும், விஷ்ணு வித்தியா

(3 ஆம் பக்கம் பார்க்க)

## எதிரணித் தலைவர்கள் நாளை ஒரே மேடையில்!

நாளை மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு எதிர்க்கட்சிகள் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளன.

இக் கூட்டத்தில் அரசுக்கு எதிரான கூட்டணி ஒன்றை அமைக்க முயற்சி செய்யும் எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் ஒரே மேடையில் தோன்றி உரையாற்றவுள்ளனர்.

புதிய கட்சி ஆரம்பித்துள்ள லலித் - காமினி குழுவினரும் இக்கூட்டத்தில் முக்கிய பங்கு வகிப்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (உ-10)

## வயோதிபர் மூவர் சிக்கினர்

யாழ்ப்பாணம், டிச. 9

வளலாயில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின்போது அப்பகுதியைச் சேர்ந்த இரு பெண்கள் உட்பட மூன்று வயோதிபர்கள் படையினரின் பிடிக்குள் சிக்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வளலாயைச் சேர்ந்த முருகுப்பிள்ளை அன்னபாக்கியம் [வயது 70], கந்தப்பிள்ளை நல்லம்மா [வயது 80], செல்லர் [வயது 85] ஆகியோரே படையினரின் பிடிக்குள் சிக்கியிருக்கின்றனர். (உ-15)

## ஷெல் வீச்சினால் வீடுகள் சேதம்

யாழ்ப்பாணம், டிச. 9

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று காலை முதல் தொடர்ச்சியாக நவக்கிரி, தோப்பு, செல்வநாயகபுரம் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதனால் அப் பகுதிகளில் பல வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளன. (ஒ-15)

## 3 போராளிகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், டி. 9

வளலாய்ப் பகுதியில் நேற்று முன்தினம் ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் இடம்பெற்ற நேரடி மோதலில் மேஜர் இளங்கோ [பளைவீமன் காமம் - அப்பூது], 2 ஆம் லெப்டினன்ட் சின்னத்தம்பி (கணபதிப்பிள்ளை சண்முகம் - புலோலி மேற்கு) ஆகிய இரு வீரவேங்கைகளும் களப்பலியானார்கள்.

பலாலி முகாம் பகுதியில் நேற்று இடம்பெற்ற நேரடி மோதலில் வீரவேங்கை இளமாறன் என்றழைக்கப்படும் இராசன் (தங்கராஜா ஜெகதீஸ்வரன் ...) வீரமரணம் அடைந்தார். (ஒ)

## முச்சந்தி முரளி



உத்தமர் இன்னும் பழைய பல்லவியைத்தான் பாடிக்கொண்டிருக்கிறார் ...... கண்டிபனே..!

## படையினர் சூடு; இருவர் காயம்

யாழ்ப்பாணம், டிச. 9

கீரிமலைப் பகுதி இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி, நேற்று இரு பொதுமக்கள் காயமடைந்தனர்.

சுதுமலையைச் சேர்ந்த செல்வநாயகம் விக்னேஸ்வரன் [வயது 58], இளவாலையில் பைரவன் சிவதீபன் (வயது 11) ஆகிய இருவருமே காயம் அடைந்தனர்.

அவர்கள் இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதேசமயம் படையினரின் ஷெல் மற்றும் தாக்குதல்களினால் கருகம்பானை, கொல்லங்கலட்டி, இளவாலைப் பகுதிகளில் சில வீடுகளும் சேதமடைந்தன. (ஒ-15)

## மீண்டும் அழைப்பும் நிபந்தனையும்!

கொழும்பு, டி. 9

சமாதானப் பேச்சுக்களை நடத்த விடுதலைப்புலிகளுக்கு ஜனாதிபதி பிரேமதாஸ மீண்டும் அழைப்பு விடுத்திருக்கிறார்.

அரசுடன் பேச்சுவார்த்தையைத் தொடங்குவதற்கு முன்னர் புலிகள் முதலில் ஆயுதங்களைக் களைய வேண்டும் என்று வவுனியாவில் நடந்த கூட்டத்தில் அவர் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் நடைபெறும் யுத்தத்தில் அதிகமாக துன்பப்படுவது அப்பாவிப் பொதுமக்களே என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

(3 ஆம் பக்கத்திலும் ஜனாதிபதியின் பேச்சு வேறாக வெளியிடப்பட்டுள்ளது.) (உ-ஏ)

## குப்பிளான் வாசிகள் இருவரும் காயம்

குப்பிளான் பகுதியில் இருந்து படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டினாலும் இருவர் காயமடைந்தனர்.

குப்பிளானைச் சேர்ந்த பொன்னுத்தோன் நடேந்திரம் (36 வயது), கணேஸ் கோகராணி (24 வயது) ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர்.

இவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். [ஒ-15]

## கீரிமலையிலும் மோதல்

யாழ்ப்பாணம், டிச 9

கீரிமலைப் பகுதியில் இருந்தும் படையினர் நேற்றுக் காலை 6-45 மணியளவில் முன்னேறும் முயற்சியில் ஈடுபட்டனர்.

அங்கும் விடுதலைப் புலிகள் போராளிகள் படையினருடன் சளைக்காது மோதினர்.

புலிகளின் தீவிர தாக்குதலினால் நிலைகுலைந்த படையினர், இழப்புகளுடன் பின்வாங்கினர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஏற்பட்ட சேதங்கள் குறித்து விரிவான தகவல்கள் கிடைக்கவில்லை. [ஒ-15]

## குப்பிளான் பகுதியில் $1\frac{1}{2}$ மணி நேரச் சண்டை

யாழ்ப்பாணம், டிச 9

பலாலி முகாம் இராணுவத்தினர் நேற்று அதிகாலை குப்பிளான் வழியாக பெருந்தெடுப்பில் முன்னேற முனைந்தனர்.

இந்தச் சமயம் விடுதலைப் புலிகள் இராணுவத்தினரை வழிமறித்து தீவிர தாக்குதலைத் தொடுத்தனர். அப்போது அங்கு கடும் சண்டை வெடித்தது.

சுமார் ஒன்றரை மணித்தியாலத்துக்கும் மேலாக நடந்த சண்டையினால் அப்பகுதி எங்கும் வேட்டுக்களினாலும், ஷெல்களினாலும் அதிர்ந்த வண்ணம் இருந்தது.

படையினர் கடும் இழப்புகளுடன் பின்னர் முகாம் திரும்பினர்.

முகாமைச் சென்றடைந்த படையினர் தொடர்ந்து ஷெல் தாக்குதல்களை நடத்திக் கொண்டிருந்தனர்.

## ஈவினையில் குண்டு வீச்சு; "மஸ்கன்ஸ்" கட்டடம் சேதம்

ஈவினைப் பகுதியில் நேற்று இரு பொம்மர்கள் கடும் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

"மஸ்கன்ஸ்" கூரைத்தடு உற்பத்தி தொழிற்சாலையை இலக்கு வைத்தே குண்டுகள் வீசப்பட்டன.

நேற்று நண்பகல் வேளை நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலினால் தொழிற்சாலைக் கட்டடத்தின் பெரும்பாலான பகுதிகள் பலத்த சேதமடைந்தன.

அயலிலுள்ள சில வீடுகளும் குண்டுவீச்சினால் சேதமடைந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-15-5)

## வளலாய் வீடுகளில் படையினர் சூறையாடல்

யாழ்ப்பாணம், டிச 9

வளலாயில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் அப்பகுதிகளில் உள்ள வீடுகளில் இருந்து உடைமைகளைச் சூறையாடி வருகின்றனர்.

அப்பகுதியில் இராணுவத்தினரிடம் ஒருநாள் முழுவதும் சிக்கியிருந்த பின்னர், நேற்று படையினரின் பிடியிலிருந்து தப்பிவந்த இடைக்காட்டைச் சேர்ந்த நாகமுத்து கணபதிப்பிள்ளை (வயது 70) என்ற ஓய்வுபெற்ற ஆசிரியர் இத்தகவலை உதயனுக்கு வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வளலாயில் உள்ள வீட்டில் வைத்து படையினரிடம் அகப்பட்டுக்கொண்டேன். அங்கிருந்து எனது கண்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## ஜி. சீ. ஈ. (சா. த.) பரீட்சை இன்று ஆரம்பமாகிறது

நாடுமுழுவதும் திட்டமிட்டபடி இன்று ஜி. சீ. ஈ [சாதாரண] தரப் பரீட்சை ஆரம்பமாகிறது.

யாழ் மாவட்டத்தில் 36 ஆயிரத்து 750 பரீட்சார்த்திகள் தோற்றுகிறார்கள்.

இவ்வப் பகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகளில் 394 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

1990 ஆம் ஆண்டுக்கு பழைய பாடத்திட்டத்திலும், 1990 ஆம், 1991 ஆம் ஆண்டுக்குரிய புதிய பாடத்திட்டத்திற்கும் அமைய, இப் பரீட்சைகள் நடைபெறவுள்ளன. (ஒ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

தம்பு சங்கரப்பிள்ளை ஆகிய எனது 820414555 V இலக்கமுடைய அடையாள அட்டையும், உணவு முத்திரைகள் நாலும் கோண்டாவிலுக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 316, நாவலர் வீதி, ஆனைப்பந்தியில் ஒப்படைக்கவும். [19008]


# மக்னெற் இன்ஸ்ரிரியூட், கல்வியங்காடு.

ஆண்டு - 11, 10, 9

விஞ்ஞானம்

★ J.R. சூரி ★

ஆரம்பம்: 9 - 12 - 1991

[இன்று] பி. ப. 2 மணி

(19006)


## பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், டிச. 9

சாரணர் வளர்ப்பு சம்பந்தமான பயிற்சிப் பட்டறை ஒன்று எதிர் வரும் 11 ஆம், 12 ஆம் திகதிகளில் காலை 9 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறும். கலாநிதி பா. சிவகடாட்சம் இந்தப் பயிற்சிப் பட்டறையை நடத்துவார். (த)

## ஆலடி அருணா குற்றச்சாட்டு

சென்னை, டிச. 9

தமிழ்நாட்டில் இலங்கைத் தமிழ் போராளிகளின் கிரிமினல் நடவடிக்கைகளுக்கு அ. தி. மு. க. வும், இந்திரா காங்கிரஸும் கூட உதவியும் ஒத்தாசையும் அளித்து வந்துள்ளன என குற்றஞ்சாட்ட முடியும்.

இப்படி தி. மு. க. பேச்சாளர் ஆலடி அருணா கூறியிருப்பதாக சென்னைச் செய்திகள் தெரிவிக்கின்றன. (த-எ)

## சென்னைக்கு அருகில் சுதந்திர வர்த்தக வலயம்

புதுடில்லி, டிச. 9

சென்னைக்குச் சமீபமாக ஒரு சுதந்திர வர்த்தக வலயத்தை நிறுவ இந்திய அரசு தீர்மானித்துள்ளது.

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள சிங்கப்பூர் வெளிநாட்டமைச்சர் வொங்கன் செங்குடன் பேச்சுவார்த்தை நடத்தியபோது இந்திய வெளியுறவு அமைச்சர் மாதவ்சிங் சோலங்கி இவ்வாறு தெரிவித்ததாக இந்திய வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்நடவடிக்கை மூலம் சிங்கப்பூர் தொழிலதிபர்கள் இந்தியாவில் முதலீடு செய்ய ஊக்குவிக்கப்படுவர் என இந்தியா நம்புவதாக தெரிகிறது. (ஒ-10)

## புலமைப்பரிசில்

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியிலிருந்து நான்கு உயர்தர வகுப்பு மாணவிகளுக்கு அவுஸ்திரேலிய பல்கலைக்கழகத்தில் மேற்படிப்பைத் தொடர புலமைப்பரிசில் கிடைத்துள்ளது.

தேவஷோபினி தேவராசாவும், பவானி கணேசலிங்கமும் பொறியியல் துறைக்கும், வசுகி கணபதிப்பிள்ளை மருத்துவத்துறைக்கும், இவரூபி சிவசுப்பிரமணியம் பல்வைத்தியத்துறைக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (இ-165)

## புகையிலை விலை அதிகரிப்பு

புகையிலையின் விலை அதிகரித்துள்ளது. குறைந்த அளவு நிலப்பரப்பில் புகையிலை உற்பத்தி செய்யப்பட்டதும் இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ 68)


# யா/வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம் முதலாம் ஆண்டு அனுமதிக்கான விண்ணப்பம் - 1992

மேற்படி அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பாடசாலையால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவத்தை ரூபா 2/- செலுத்தி யா/வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் 20 - 12 - 1991 க்கு முன் பெற்று விண்ணப்பிக்கவும்.

விண்ணப்ப முடிவு திகதி:- 31 - 12 - 1991

★ மேற்படி பாடசாலை மாணவர்களின் மே/ஜூன்/ஜூலை மாதங்களுக்குரிய உணவு முத்திரைகளை 11 - 12 - 1991 புதன்கிழமை அன்று யா/வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

— அதிபர்.

8 - 12 - 1991. (19010)


# பரீட்சை நிலைய மாற்றம் தெளிவான தகவல் இல்லை!

யாழ்ப்பாணம், டிச. 9

இன்று ஆரம்பமாகும் ஜி. சீ. ஈ. (சாதாரணதரப்) பரீட்சைக்கு அச்சுவேலி, இடைக்காடுப் பகுதி பரீட்சை நிலையங்களைச் சேர்ந்த பரீட்சார்த்திகள் எங்கே பரீட்சைக்குத் தோற்றுவது?

நடந்த சனிக்கிழமை திடீரென இராணுவ நடவடிக்கைக்கு இலக்கான இப்பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் எங்கே பரீட்சைக்குத் தோற்றுவது என்பது தெரியாமல் முழிக்கின்றனர்.

பரீட்சை நிலையங்களின் மாற்றம் குறித்து உத்தியோகபூர்வமான அறிவித்தல் ஏதும் யாழ் கல்வித் திணைக்களத்திடம் இருந்து நேற்றிரவு வரை உதயனுக்குக் கிடைக்கவில்லை.

மாற்றுப் பரீட்சை நிலையங்கள் நீர்வேலி, சிறுப்பிட்டி ஆகிய இடங்களில் உள்ள பாடசாலைகளில் நடத்தப்படும் என்று மொட்டைமாக்' ஓர் அதிகாரி தெரிவித்தார்.

உதயனின் வெவ்வேறு செய்தியாளர்களுக்குக் கிடைத்த மாற்றுப் பரீட்சை நிலையங்களின் பட்டியல்களில் பெரும் வித்தியாசம் காணப்பட்டது. அதனால் எது சரி எது தவறு என்று இனங்காணமுடியவில்லை.

கல்வித் திணைக்களம் இது

(3ஆம் பக்கம் பார்க்க)

# 90 ஆயிரம் அகதிகள் தமிழகத்தில் தங்க விருப்பம்

சென்னை, டிச. 9

தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளில் சுமார் 90 ஆயிரம் பேர் இலங்கை திரும்ப விருப்பம் தெரிவிக்கவில்லை என்று மாநில அகதிகளின் மறுவாழ்வு ஆணையாளர் சி. எம். இராமதாஸ் சொன்னார்.

16 ஆயிரத்து 700 இலங்கைத் தமிழ் அகதிகள் மட்டுமே இலங்கை திரும்பி, இலங்கை அரசால் நிர்வகிக்கப்படும் முகாம்களில் தங்க முன்வந்துள்ளனர் என்றும் அவர் சொன்னார்.

ஐ. நா. நிறுவனம் அகதி முகாம்களை நிறுவி அவற்றைப் பராமரிக்க முன்வந்தால், தமிழகத்தில் அகதிகள் அனைவருமே இலங்கை திரும்ப முன்வருவார்கள் என்றும் திரு. இராமதாஸ் கூறினார்.

இலங்கை அரசால் ஏற்படுத்தப்படும் முகாம்களில் இலங்கைத் தமிழ் அகதிகள் வாழ்ந்தால், அவர்களுக்கு எதிராக இலங்கை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கக் கூடும் என்ற இலங்கைத் தமிழ் அகதிகள் அச்சம் தெரிவித்துள்ளனர் என்றும் திரு. இராமதாஸ் சொன்னார். [இ-எ]


# NEW SCIENCE HALL

JAFFNA

BOTANY

*Lower Plants*

V. S. குணசீலன் B. Sc.

ஆரம்பம் : 10 - 12 - 91

(இ/0989)



# வெல்லுங்கள்! வெல்லுங்கள்!! விரையுங்கள்!!!

உங்கள் சிந்தனைக்கும், கலைத்திறனுக்கும் சவால்!!!

யாழ். றோட்டரிக் கழகம்

நடத்தும்

போலியோ (இளம்பிள்ளைவாதம்) தடுப்பு சுவரொட்டி (போஸ்டர்) / சுலோகப்

# போட்டிகள்

போலியோ நோயின் ஆபத்தை விளக்கவும், அது குறித்து மககள், விசேடமாக இளைஞர்கள் மத்தியில் விழிப்புணர்வைத் தூண்டவும்,

உதயன் வெளியீட்டகத்தின் ஆதரவுடன்

இப் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

சுவரொட்டிகளும், சுலோகங்களும் —

போலியோ தாக்குவதால் ஏற்படும் விளைவுகளை எடுத்துக் காட்டுவதுடன் — நோய் பிள்ளைகளைத் தாக்காது தடுப்பு நடவடிக்கைகளை எடுப்பதற்கு மக்களைத் தூண்டும் கருத்துக்களையும் வெளிக்கொணர வேண்டும்.

★ பரிசுகள் சுவரொட்டி, சுலோகம் ஆகிய இரண்டு பிரிவுகளுக்கும் தனித்தனியாக வழங்கப்படும்.

★ முதற் பரிசு: ரூ. 1000.00

★ இரண்டாவது பரிசு: ரூ. 750.00

★ மூன்றாவது பரிசு: ரூ. 500.00

★ பத்து ஆறுதல் பரிசில்களும் உண்டு.

முடிவு திகதி:- 31 - 12 - 1991

போட்டி விதிகள்:

01. 15 தொடக்கம் 25 வரையிலான வயதுடைய இருபாலாரும் போட்டிகளில் கலந்து கொள்ளலாம். (பரிசுக்காக தேர்ந்தெடுக்கப்படுபவர் தனது வயதை நிரூபிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.)

02. ஒருவர் இரு பிரிவு போட்டிகளிலும் கலந்து கொள்ளலாம். எனினும் ஒரு பிரிவில் ஒரு விண்ணப்பம் மட்டுமே அனுப்ப வேண்டும்.

03. பரிசுக்காக தேர்ந்தெடுக்கப்படுவோர் ஆக்கம் தமது சொந்தப் படைப்பு என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

04. விண்ணப்பங்கள் யாவும் செயலாளர், யாழ். றோட்டரிக் கழகம் 15/2, இரண்டாவது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

05. போட்டி தொடர்பாக எவ்வித கடிதத் தொடர்பும் வைத்துக் கொள்ளப்படமாட்டாது. பரிசு பெற்றவர்களின் விபரம் பத்திரிகைகளில் வெளியிடப்படும்.

06. போட்டி தொடர்பான சகல விடயங்களிலும் யாழ். றோட்டரிக் கழகத்தின் தீர்ப்பே முடிவானது.

★ உதயன் வெளியீட்டக ஊழியர்களும், றோட்டரிக் கழக உறுப்பினர்கள் மற்றும் குடும்பத்தினரும் இப்போட்டிகளில் கலந்து கொள்வது தவிர்க்கப்பட்டுள்ளது.

செயலாளர்,
யாழ். றோட்டரிக் கழகம்.

யாழ்ப்பாணம். (ஈ 107)



# கம்பியூட்டர் ஆசிரியர் தேவை

யாழ். நகரிலுள்ள பிரபல கம்பியூட்டர் நிறுவனமொன்றில் கடமையாற்ற அனுபவமுள்ள கம்பியூட்டர் ஆசிரியர் தேவை. 20-12-1991க்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்.

இல. 828, மே/பா உதயன்,
யாழ்ப்பாணம்.

(இ/1058)


# தசாக அறிவித்தல்

## குமாரசுவாமி ஐயர் ஜீவரட்சாயணி அம்மா

சாரைநகர் கனபூமி தன்னை சித்தி விநாயகர் ஆலயத்தில் 16-11-1991இல் சிவபதமடைந்த எமது அன்புத் தாயாரின் ஆத்ம சாந்திக் கிரியைகள்

10-12-1991 செவ்வாய் தசாகம்
11-12-1991 புதன் ஏகோதிட்டம், மாசியம்
13-12-1991 வெள்ளி சபிண்டீகரணம்
14-12-1991 சனி கிருகயக்ஞம்

ஆகியன நீர்வேலியில் நடைபெறும் என்பதனை உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

மக்கள்: கு. கணேசசர்மா,
கு. ஆனந்தசர்மா,
கு. சிதம்பரநாதக் குருக்கள்,
கு. தியாகராசசர்மா (மணி),
கு. இரத்தினசர்மா (பாப்பா),
திருமதி சா. கௌரியாம்பிகை,
திருமதி வ. ஞானாம்பிகை அம்மா.

ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் கோவில்,
வடக்கு வீதி,
நீர்வேலி. (18942)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## உள் நோக்கம்

அமைச்சர் திரு. தொண்டமானின் யாழ்ப்பாண விஜயம் திடீரென ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள பொலிஸார் மற்றும் படையினரைப் பார்வையிடுவதற்காக அவர்களின் உறவினர்கள் யாழ்ப்பாணம் வருகை தர இருந்தமையும் தள்ளி வைக்கப்பட்டுள்ளது. இப்போது யாழ்ப்பாணம் செல்லக் கூடாது என்று கூட்டுப் படைத் தலைமை அலுவலகம் அவர்களுக்குத் தடை விதித்திருக்கிறது. இவை திடீரென வந்த அறிவிப்புகள். மக்கள் பலரும் எதிர்பார்த்ததற்கு மாறான நிகழ்வுகள்.

அரசாங்கமும், அரசாங்கப் படைகளும் வடக்கிலும், கிழக்கிலும் போர் நிலையை மேலும் விஸ்தரிக்க விரும்புகின்றன. யுத்தத்தைத் தொடரவே கங்கணம் கட்டியுள்ளன. சமாதானம், பேச்சுவார்த்தை என்பது எல்லாம் வெறும் பசப்புத்தும், காலம் வாங்கும் தந்திரமுமாகும் — என்பதையே இந்தத் திடீர் மாற்றங்கள் பிரதிபலிக்கின்றன.

தமிழர் பிரச்சினையைப் பொறுத்தவரையில் இராணுவத் தீர்வு வழியை நாடுவது என்ற தனது முடிவை, அழுங்குப் பிடியை, அரசாங்கம் மாற்றுவதாக இல்லை. இராணுவ மேலாதிக்க நிலையை எய்திய பின்னர், தான் விரும்பிய தீர்வு ஒன்றை திணிப்பது என்ற கோட்பாட்டை அரசு சிறிதேனும் மாற்றவில்லை; தளர்த்தவேனும் விரும்புவதாக இல்லை.

படைகள் தொடர்ந்து நடத்தி வரும் இராணுவ நடவடிக்கைகள் இதனை மிகத் தெளிவுற நிரூபிக்கின்றன. இராணுவ அதிகாரிகள் பத்திரிகைகளுக்கு அளித்துவரும் பேட்டிகள் துலாம்பரமாக்குகின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக ஜனாதிபதி பிரேமதாசாவின் வவுனியாப் பேச்சு, வடக்கு-கிழக்கில் இராணுவ மேலாதிக்க நிலையை மட்டுமன்றி, இராணுவ ஆட்சியையே நிறுவுவதற்கு அவர் விரும்புகிறார் என்பதை ஊர்ஜிதம் செய்கிறது!

அரசாங்க அதிகாரிகள் 80 சதுர மைல் விஸ்தீரணத்தில் மீண்டும் சிவில் நிர்வாகத்தை உருவாக்கினால், பாதுகாப்புப்படையினர் தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதியை 250 சதுர மைல்களுக்கு விஸ்தரிக்கத் தயாராக உள்ளனர் என்று அப்பட்டமாகவே அவர் கூறியிருக்கிறார்.

தமிழ்ப் பகுதிகளில் சிவில் நிர்வாகம் ஏற்படுத்துவது என்ற பேரில் இராணுவ ஆக்கிரமிப்பு நடத்துதல்; அதன் பின்னர் பேச்சுவார்த்தை, தீர்வு, தேர்தல், சனநாயக நடவடிக்கைகள் என்று நாடகம் ஆடிக்கொண்டு தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களவர்களைக் குடியமர்த்தும் சூழ்ச்சியை ஒப்பேற்றுதல் இவையே ஜனாதிபதியினதும் அரசாங்கத்தினதும் உள்நோக்கங்கள் ஆகும்.

ஆகவே வடக்கு-கிழக்கை இராணுவ மயப்படுத்தும் தனது திட்டத்தை அரசாங்கம் உடனடியாகக் கைவிடும் என்று எதிர்பார்க்க முடியாது. சிற்சில இடைவெளிகளை விட்டு, இடைக்கிடை ஓய்வெடுத்துக் கொண்டு, இராணுவ நடவடிக்கைகளை தொடரவே செய்யும்.

இதனை கருத்திற்கொண்டே தமிழர்களின் நடவடிக்கைகள் அமைய வேண்டும். அணுகு முறைகள் வகுக்கப்பட வேண்டும் சாதுரியமாகவும், தந்திரோபாயத்துடனும் செயற்பட வேண்டும்.

---

வடக்கே சிங்களவர் இல்லை

# தெற்கே இன்னும் தமிழர் பெருமளவு வாழ்கின்றனர்

### வவுனியாவில் ஜனாதிபதி உரை

கொழும்பு, டிச. 9

வடக்கே முதலில் பெருமளவு சிங்கள மக்கள் வாழ்ந்தார்கள். ஆனால் இன்று அத்தகைய நிலை கிடையாது. அதே நேரம் தெற்கே இப்போதும் தமிழ் மக்கள் பெருமளவில் வாழ்கின்றனர்.

வவுனியா சிங்கள மகாவித்தியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசியதாவது;

இன்றைய வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சிறிசேன கூரேயின் சகோதரர் நந்தசேன கூரே அன்று வவுனியாவில் திரு சி சுந்தரலிங்கத்திற்கு எதிராகப் போட்டியிட்டார்.

அப்போது அவர் வவுனியாவின் சகல பகுதிகளுக்கும் சென்று வந்தார். அன்று இருந்த இன ஒற்றுமை நிலை மீண்டும் உருவாக்கப்பட வேண்டும்.

வடக்கு - கிழக்கு யுத்தத்தில் அரசாங்கத்தினால் வெற்றி பெற முடியும்.

### அர்த்தமற்ற யுத்தம்

ஆனால் மக்களின் அமைதியான வாழ்க்கையை உறுதிப்படுத்த வேண்டும் என்பதினாலேயே யுத்தத்தை நடத்த அரசு விரும்பவில்லை.

தற்போது நடைபெறுவது அர்த்தமற்ற ஒரு யுத்தமாகும். எமது சொந்தப் பிரஜைகளோடு அரசாங்கம் யுத்தம் செய்ய விரும்பவில்லை இவர்களில் சிலர் பயங்கரவாதிகளாக இருப்பதால் வேறு வழியின்றியே யுத்தம் நடைபெறுகின்றது.

எமது குழந்தைகளில் ஒன்று கெட்டது என்றால் அதனை வேறொருவரைக் கொண்டு அழிக்கக்கூடாது. அடுத்தவர் நண்பர் என்றாலும் அவரை அழைத்து எமது பிள்ளைகளைக் கண்டிக்கக் கூடாது.

இப்படி ஜனாதிபதி மேலும் கூறினார். [இ-எ]

# பாஸ்போர்ட், வீஸாக்கள் கடத்தும் முயற்சி அம்பலம்

புகைப்பட அகதிகளுக்கு சிங்கப்பூர் பாஸ்போர்ட்கள் மற்றும் பிரிட்டிஷ், ஜேர்மன் வீஸாக்கள் வைத்துக் கடத்தப்படுவது அம்பலமாகி உள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இலங்கை அகதிகள் என்று கூறப்படுவோரை மேற்கு நாடுகளுக்குக் கடத்திச் செல்ல எடுக்கப்பட்டு வந்த பாரிய மோசடி நடவடிக்கைகளை சுங்கப் பகுதி அம்பலப்படுத்தியுள்ளது. இந்த அகதிகளைக் கடத்துவதற்கு வசதியாக சிங்கப்பூர் பாஸ்போர்ட்டுகளும் பிரிட்டிஷ் மற்றும் ஜேர்மன் விஸாக்களும் கடத்திச் செல்லப்பட்ட மோசடி அம்பலத்துக்கு வந்திருக்கிறது. (த-எ)

# உட்கட்சி பூசல் பற்றிய விவரங்களை வெளியிட சிறிமாவோ விருப்பம்

உட்கட்சி பூசல் பற்றிய விவரங்களை வெளியிட சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமா பண்டாரநாயக்கா முன்வந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்காக அகில இலங்கை ரீதியிலான கட்சியின் நிர்வாகக் குழுவை கூட்டி அதன் முன் இவ் விவரங்களை திருமதி பண்டாரநாயக்கா முன் வைக்கலாம் என்று நம்பப்படுகிறது.

சந்திரிகாவுக்கு சிறிமாவின் ஆதரவு உண்டு என்றும் —

இறுதி யுத்தம் சிறிமாவுக்கும் அனுராவுக்கும் இடையே தான் நடைபெறவுள்ளது என்றும் கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. [த-எ]

## பரீட்சை..

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

சம்பந்தமான — மாற்றுப் பரீட்சை நிலையங்களின் பட்டியலை — பத்திரிகை அறிக்கையாக நேற்றிரவுக்கு முன்னதாக வெளியிட்டிருக்க வேண்டும்; அவ்வாறு செய்திருந்தால் பரீட்சார்த்திகள் இன்று அவதிப்படத் தேவையில்லை அல்லவா? (அ-உ)

## புத்தூர்-

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

யத்தில் நூற்றி ஐம்பது குடும்பங்களும், சிவன் கோவிலில் நூற்றி ஐம்பது குடும்பங்களும் தங்கி இருந்தன.

இதே சமயம் இடம் பெயர்ந்த மக்களுக்கு மூன்று நாட்கள் சமைத்த உணவு வழங்கலாம். செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கான பணிப்புரையை சம்பந்தப்பட்ட பகுதி உதவி அரசாங்க அதிபர்களிடம், செயலகத் திட்டப் பணிப்பாளர் நேற்று விடுத்தார். [இ 5]

## பலாலி-

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

குப்பிளான், ஏழாலை, குரும்பசிட்டி, புன்னாலைக் கட்டுவன், ஈவினை, அச்சுவேலி கைத்தொழில் பேட்டை பகுதிகளில் குண்டு வீச்சுக்கள் நடத்தப்பட்டன.

இராணுவ முகாம்களை அண்டிய பகுதிகளில் இருந்து நேற்றும் மக்கள் [illegible] இடம்பெயர்ந்திருந்தனர். [இ-5-15]

## வளலாய்.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ணைக்கட்டி சல்விப் பகுதிக்கு படையினர் கூட்டி வந்தனர். அங்கு எனது கண்கட்டை அவிழ்த்து விட்டனர். பின்னர் அப்பகுதியிலிருந்த கடைகளை நாசமாக்கினர். எம்பவரது கடையை உடைத்து அங்கிருந்த பல்லாயிரக் கணக்கான ரூபா பெறுமதியான பொருட்களைப் படையினர் சூறையாடினர். அந்தப் பொருட்களை அவர்கள் லொறி ஒன்றில் ஏற்றிச் சென்றனர்.

மேலும் பல வீடுகளை உடைக்க வேண்டும் என்றும் அதற்குத் தங்களுக்கு உதவும்படியும் அவர்கள் பணித்தனர்.

நான் நோயாளி என்றும், அருகில் இருக்கும் எனது வீட்டுக்குச் சென்று மருந்து சாப்பிட்டு வர அனுமதிக்கும்படியும் அவர்களை வேண்டினேன். மருந்து எடுப்பதற்கு வீட்டுக்குச் செல்வதாகச் சொல்லி, ஒருவாறு அவர்களின் பிடியிலிருந்து தப்பிவந்தேன் - என்று அவர் மேலும் சொன்னார். (ஓ-15)

---

# யாழ். விஜயம் ஒத்திவைக்கப்பட்டமை குறித்து தொண்டா தரும் விளக்கம்

கொழும்பு, டிசம்பர் 9

தமது யாழ். விஜயம் ஒத்திவைக்கப்பட்டமை குறித்து அமைச்சர் தொண்டமான் கொழும்புப் பத்திரிகைக்குத் தெரிவித்த விவரங்கள் வருமாறு:-

''பேச்சு நடத்த இம்மாதம் 10 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருமாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. மகேந்திரராஜா எனக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறார்.

நான் உடனடியாக அங்கு போகமுடியாது. இதனால் எனது நிலைமைகளை விளக்கி திரு. மாத்தையாவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளேன்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்துவதற்கு முன்னர் அதற்கான அடிப்படையை அமைத்துக் கொள்வதற்காக அரசாங்கத்துடனும், எதிர்க்கட்சிகளுடனும் நான் பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து நடத்தி வருகின்றேன்.

எனது யாழ்ப்பாணத்திற்கான ஒழுங்குகளை செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழுவே செய்ய வேண்டும்.

ஒழுங்குகளை செய்ய குறைந்தது 10 நாட்களாவது தேவை. ஆகையால் நான் 10 ஆம் திகதி யாழ். செல்ல முடியாதுள்ளது'' — என்று அமைச்சர் சொன்னார்.

''தைப்பொங்கலை முன்விட்டு வடக்கு கிழக்கு மாகாணத்தில் யுத்த நிறுத்தம் ஒன்றை அரசு பிரகடனம் செய்யுமா?'' — என்று கேட்டதற்கு -

''அதனை இப்பொழுதே கூற முடியாது'' — என்று அவர் பதிலளித்தார். [உ-எ]

## செயல் அமர்வு ஒத்திவைப்பு

அச்சுவேலி, டிச. 9

தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சித் திட்டத்தின் கீழ் பயிலுநர் ஆசிரியர்களுக்கு இன்று முதல் நடைபெறவிருந்த 5 நாள் தொடர்பு செயல் அமர்வு பின்போடப்பட்டுள்ளது.

ஐந்து நாள் தொடர்பு செயல் அமர்வு இம்மாதம் 19ஆம் திகதி தொடக்கம் 23ஆம் திகதி வரை ஐந்து தினங்களுக்கு நடைபெறும்.

யாழ். மாவட்டத்தில் உள்ள 10 பயிற்சி நிலையங்களிலும் 5 நாள் தொடர்பு அமர்வு ஏககாலத்தில் நடைபெறும். [ஓ-11]

# எதிர்க்கட்சி கூட்டணியில் வாசுவின் கட்சி சேராது

கொழும்பு, டிசம்பர் 9

எதிர்க்கட்சிகள் அரசுக்கு எதிராக அமைக்கவுள்ள கூட்டணியில் வாசுதேவ நாணயக்காரவின் நவசமசமாஜக் கட்சி சேர வாய்ப்பில்லை என்று கட்சியின் பொதுச் செயலாளர் டாக்டர் விக்கிரமபாகு கருணாரத்ன கூறினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் லலித் - காமினி குழுவினரால் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட கட்சியும் முதலாளித்துவ கொள்கைகளைப் பின்பற்றுபவையாகும். அக்கட்சிகள் அங்கம் வகிக்கும் எந்தக் கூட்டணியிலும் எமது கட்சி இணையமாட்டாது. —

தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பாகவும் மேற்படி கட்சிகள் சிங்கள இனவாதக் கொள்கையை பற்றிக் கொண்டு நிற்கின்றன. ஆனால் எமது கட்சி தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரித்துள்ளது. எனவே அந்த விடயத்திலும் எதிர்க் கட்சிக் கூட்டணியினருடன் எம்மால் ஒத்துப்போவது முடியாத காரியம் - எனவும் டாக்டர் விக்கிரமபாகு தெரிவித்தார்;

பி. பி. ஸிக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.] (ஓ-10)

# வடக்கு - கிழக்கு மக்களின் இதயங்களை வெல்லவேண்டும்

### சர்வகட்சி மாநாட்டில் பிரேமா

கொழும்பு, டிச. 9

வடக்கு - கிழக்கு பகுதிகளில் வாழும் மக்களின் இதயங்களை வெல்வதுதான் உண்மையான வெற்றியாகும்—என்று ஜனாதிபதி பிரேமதாச தெரிவித்திருக்கிறார்.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற அனைத்துக் கட்சி மாநாட்டில் வைத்தே ஜனாதிபதி இவ்வாறு சொன்னார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:—

இத்தகைய வெற்றியை அடைவதற்கு அவர்களின் அரசியல் பிரச்சினைக்கும் பரிகாரம் காண்பதே ஒரே ஒரு வழியாகும்; சகல கட்சியினரதும் கருத்து ஒற்றுமை மூலமே இதனைச் சாதிக்க முடியும். ஆயுத படையினரதும் பொலீஸாரினதும் அர்ப்பணிப்பு சித்தமுடனான முயற்சியுடனேயே வடக்கு - கிழக்கில் இடம்பெற்றுவரும் அவசியமில்லா யுத்தத்தில் வெற்றிகாண முடியும் - என்றார் அவர். [அ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## கனகரத்தினம் காசிப்பிள்ளை

புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கனகரத்தினம் காசிப்பிள்ளை 28-10-1991இல் புங்குடுதீவில் காலமானார்.

இவர் பெருங்காடு கிராஞ்சிலம்பதி கந்தசாமி கோவில் தர்மகர்த்தாவும், கனகம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பாலசிங்கம், யோகம்மா (ஜேர்மனி), திருநீலகண்டன் (பாண்டியன்தாழ்வு), இராசலிங்கம் (றக்கா றோட்), கந்தசாமி (தபால் கந்தோர்-புங்குடுதீவு), மார்க்கண்டு (ஜேர்மனி), ஆனந்தராசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற புவனேஸ்வரி, பாலசிங்கம் (ஜேர்மனி), இந்திராணி, யோகராணி, தர்மாம்பிகை, இராசேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும், செல்வராணி, நகுலேஸ்வரன் (ஜேர்மனி), பரிமளகன், பாஸ்கரன் (சோதரராசா நோர்வே), பவானி (நோர்வே), சுபாஜினி (நோர்வே), சுதர்ஜினி (ஜேர்மனி), பாலேந்திரன் (ஜேர்மனி), பாவரூபன் (சுவிஸ்), சுரேசனா, சபேசன், சுதர்சன், பகீரதன், சுகிர்தராசா, அனுஜியா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 29-10-91இல் புங்குடுதீவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கா. திருநீலகண்டன் [மகன்]

60, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம். [19009]

## பூபாலசிங்கம் விஜயகுமார்

கிளிநொச்சியைச் சேர்ந்த பூபாலசிங்கம் விஜயகுமார் கனடாவில் அகால மரணமானார்.

அன்னார் திரு. வேலுப்பிள்ளை பூபாலசிங்கம் திருமதி தங்கமணி பூபாலசிங்கம் தம்பதியின் அன்பு மகனும், காலஞ்சென்ற தர்மராணி (திருவையாறு), மற்றும் யோகராணி (கனடா), அரசராணி (இந்தியா), புவனேஸ்வரி (திருவையாறு), கலாநிதி (கனடா), மங்கையர்க்கரசி (உதயநகர்), உதயகுமார் (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் ஈமச்சடங்குகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்வதோடு, இத்தகவலை அறிந்த உறவினர்களோ, நண்பர்களோ, தயவு செய்து அன்னாரின் தந்தை வேலுப்பிள்ளை பூபாலசிங்கம் (உடுப்பிட்டி) அவர்களுக்கு அறிவித்து உதவும்படியும் கேட்டுக்கொள்கிறோம்.

"டலஸ் விலா",
25/5, சென்றல் றோட்,
கொழும்பு.—12

தகவல்:
பெ. மயில்வாகனம்
[C/0990]

## வேலாயுதம் நடராசா

உரும்பராயைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. வே. நடராசா (ஓய்வுபெற்ற சிறைப்பிரிவு, யாழ். செயலகம்) [08-12-91] நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமேஸ்வரி, இராசேஸ்வரி ஆகியோரின் அன்புக் கணவரும், வசந்தநாதனின் (சவூதி அரேபியா) அன்புத் தந்தையும், இந்திராவின் அன்பு மாமனாரும், உஷா பாபு, சஞ்சீவன், கீதா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற பஞ்சலிங்கம், சிவசுப்பிரமணியம், நடேஸ்வரி, தர்மலிங்கம், ரஜனாதேவி, மகேஸ்வரி, யோகேஸ்வரி, இரத்தினேஸ்வரி, சிறீஸ்கந்தராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று 09-12-91 காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

13, உடையார் ஒழுங்கை,
கந்தர்மடம்:
[19014]

தகவல்:
திருமதி இராஜேஸ்வரி
நடராசா [மனைவி]

## திரு. ச. ஜெயசீலன்

நாரந்தனையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்பொழுது இல. 51 விதானையார் வீதி யாழ்ப்பாணத்தில் வசித்தவரும், ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கக் கிளை முகாமையாளருமாகிய திரு. றெஜினோல்ட் ஜெயசீலன் 6-12-91 இல் காலமானார்.

அன்னார் திரு. திருமதி B. M. சவரிமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் திருமதி பிறிஜெட் பொன்றோசின் அருமைக் கணவரும் அன்ரனி சுதாகரன், தர்சன், மீரஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. பீற்றர் சிங்கம் (முன்னாள் ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி), திருமதி இமல்டா கருணாகரன் (நூலகர், யாழ். பொதுசன நூலகம்), திருமதி ஸ்ரெலா ரவீந்திரன் (ஆசிரியை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், திரு. திருமதி சைமன் தம்பதிகளின் அன்பு மருமகனும் றாபி, கருணாகரன், ரவீந்திரன், பொன்னலன் (மக்கள் வங்கி யாழ்ப்பாணம்) பொன்மலர், பொன்சோதி, பொன்ராணி ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரது ஈமச்சடங்குகள் 7-12-91 இல் நடைபெற்று புனித மரியாள் பேராலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது என்பதை மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி

இல. 51 விதானையார் வீதி,
யாழ்ப்பாணம். [19013]

## ஜி. சி. ஈ. (சா/த) பரீட்சை

# சகலரதும் ஒத்துழைப்பை கோருகிறார் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், டிச. 9

பரீட்சை நிலையங்களை மாற்றியதால் ஏற்பட்டுள்ள அசௌகரியங்களைப் பொறுத்துக்கொண்டு, பரீட்சை சுமுகமாக நடைபெற சகல தரப்பினரும் ஒத்துழைப்பு நல்கவேண்டும்.

யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் நேற்று இப்படித் தெரிவித்தார்.

நேற்று நண்பகல் 12 மணி வரை தமது நிலையங்களுக்குச் சமுகமளிக்காத பரீட்சை நிலைய நிரந்தர நோக்குனர்களது நியமனங்கள் அனைத்தும் ரத்துச் செய்யப்படுவதாகவும் அவர் சொன்னார்.

இதேவேளை—

ஜி. சீ. ஈ. சாதாரண பரீட்சை சுமுகமாக நடைபெற ஏற்ற சூழ்நிலையை உருவாக்குமாறு கோரும் செய்தி ஒன்றினை அவர் நேற்றுப் பரீட்சை ஆணையாளருக்கும் அனுப்பி வைத்தார்.

வலிகாமம் பகுதியில் தோன்றியுள்ள நிலைமைகளால் மாணவர்கள் இடம்பெயர்ந்துள்ள நிலைமையை அந்தச் செய்தியில் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ஓ-5)

# அபிவிருத்திக்கான நிதி இனி உள்ளூராட்சி சபைகளுக்கே

யாழ்ப்பாணம், டிச. 9

யாழ். மாவட்டத்திற்கான அபிவிருத்தி வேலைகளுக்கு மாகாண சபையால் வழங்கப்படும் நிதி இனி அரச அதிபர்களுக்கு அனுப்பப்படமாட்டாது. உள்ளூராட்சி சபைகளுக்கே நிதி வழங்கப்படவிருக்கிறது.

வடக்கு கிழக்கு மாகாணசபை உயர் அதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட அபிவிருத்தி நிதிக்குப் புறம்பாக மாகாணசபையால் கிராம மட்டத்தில் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

இந்த வேலைகளுக்கான நிதி கிராமிய மட்டத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தியின் அடிப்படையில் வழங்கப்படும். உள்ளூராட்சிசபை, உதவி அரச அதிபர் மூலம் இந்த நிதி வழங்கப்படும். அரச அதிபர் வேலைகளை மேற்பார்வை செய்வார் என்றும் அவர் தெரிவித்தார். (ஓ-3)

# கொலை முயற்சிக்கு இலக்கான சிசு மரணம்

யாழ்ப்பாணம், டிசம்பர் 9

கொலை முயற்சிக்கு இலக்கானதாகத் தெரிவிக்கப்பட்டு, நேற்று முன்தினம் இரவு யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ஒரு நாள் வயதுடைய சிசு நேற்று மரணமானது.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த தாய் ஒருவரே தனது சிசுவைக் கழுத்தில் திருகிக் கொல்ல முயன்றதாகக் கூறப்படுகிறது.

சிசுவின் மரணம் குறித்து விசாரணை நடத்திய மரண விசாரணை அதிகாரி திரு. கே. கேசவன், பிரேத பரிசோதனைக்கு உத்தரவு பிறப்பித்து, தீர்ப்பை ஒத்திவைத்தார். (உ-15)

# மரண அறிவித்தல்

## வஸ்தியாம்பிள்ளை சவிரிமுத்து

சரம்பனை பிறப்பிடமாகக் கொண்டவரும் உருத்திரபுரத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான வஸ்தியாம்பிள்ளை சவிரிமுத்து (இராசதுரை) நேற்றுக் காலமானார்.

இவர் மேரி திரேஸாவின் அன்புக் கணவரும், எலிஸ் வனிதாவின் தந்தையும், செல்வராசாவின் மாமனாரும், காலஞ்சென்ற திரேசம்மா, மார்ட்டின் மற்றும் பிலோமினா, டொமினிக், ஞானேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், சிந்து, நிரோ, நிலா, நிஷா ஆகியோரின் பாட்டனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லூர் சுவாமி வீதி 53 ஆம் இலக்க இல்லத்திலிருந்து பரி. கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக இன்று மாலை எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
(18634) டொமினிக்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டாரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 9-12-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# 3 படையினர் உயிரிழப்பு

கொழும்பு, டிச. 9

பலாலி முகாம் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் மூன்று படையினர் கொல்லப்பட்டனர் என்றும், மூன்று படையினர் படுகாயமடைந்தனர் என்றும் கொழும்பில் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பலாலி இராணுவ தளத்திற்கு அருகே அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் பதுங்கு மிடங்களை இராணுவத்தினர் தாக்கி அழித்துவிட்டனர் என்றும் —

பலாலி விமான தளத்தில் ஹெலிக்கொப்டர் மற்றும் விமானங்கள் இறங்கும் போதோ அல்லது பறக்கும் போதோ அவற்றைத் தாக்க விடுதலைப் புலிகள் பயன்படுத்திவந்த விமான எதிர்ப்புப் பீரங்கி ஒன்றையும் இராணுவத்தினர் அழித்து விட்டனர் என்றும் அந்த அதிகாரி கூறினார். (ஓ. சி.)

## சிற்றூரவைகளின் கூட்டம்

யாழ்ப்பாணம், டிச. 9

நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் சகல சிற்றூரவைத் தலைவர்களுக்கான வழமையான மாதாந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் யாழ். மாவட்டத்தின் அனைத்து சிற்றூரவைகளின் சகல உறுப்பினர்களையும் கலந்து கொள்ளும்படி கேட்கப்பட்டிருக்கிறது. (உ)

## வயோதிபர் மரணம்

யாழ்ப்பாணம், டிச. 9

தென்னை மரத்தில் இருந்து மதில் சுவரின் மேல் விழுந்து தலையில் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவர் நேற்று அங்கு மரணமானார்.

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த பொன்னு சின்னத்துரை (வயது 70) என்ற வயோதிபரே மரணமானார். (ஓ-15)

## ஏகாதசி மகோற்சவம்

யாழ்ப்பாணம், டிச. 9

சரித்திரப் பிரசித்தி பெற்ற பொன்னாலை வரதராசப் பெருமாள் கோவில் ஆலய வைகுண்ட ஏகாதசி மகோற்சவம் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 17 ஆம் திகதி தேர்த்திருவிழா இடம்பெறும். (உ)

## றோட்டரி உடுபுடைவை அன்பளிப்பு

யாழ்ப்பாணம், டிச. 9

காரைநகர், மாவிட்டபுரம் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த அகதிகளுக்கு யாழ். றோட்டரிக் கழகம் உடுபுடைவைகளை வழங்கியது.

ஷெப்றா நிறுவனத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட இந்த உடுபுடைவைகள் கடந்த வாரம் சங்கானையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் வைத்து அதிகளிடம் கையளிக்கப்பட்டன. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org